தினமணி
www.dinamani.com

# எஸ்.கேதார்நாத் நினைவு சொற்பொழிவு

**கோவை, டிச. 20:** இந்திய வன மரபியலின் தந்தை டாக்டர் எஸ். கேதார்நாத் நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சி கோவையில் அண்மையில் நடைபெற்றது.

கோவை வனமரபியல், மரப் பெருக்கு நிறுவனம் காணொலி மூலம் நடத்திய இந்த சொற்பொழிவை, கொல்கத்தா தாவரவியல் ஆய்வுக் கழகத்தின் முன்னாள் இயக்குநர் எம்.சஞ்சப்பா 'இந்தியாவில் மலர் பன்முகத்தன்மை: ஒரு கண்ணோட்டம்' என்ற தலைப்பில் நிகழ்த்தினார்.

முன்னதாக பங்கேற்பாளர்களை முதுநிலை விஞ்ஞானி கண்ணன் வரவேற்றார். நினைவு சொற்பொழிவு அறிமுகத்தை முதுநிலை விஞ்ஞானி கே.ஆர்.சசிதரன் வழங்கினார்.

வனமரபியல் நிறுவன இயக்குநர் சி.குன்னி கண்ணன் தலைமை உரையாற்றினார். டேராடூன் இந்திய வன ஆராய்ச்சி, கல்விக் கழக துணை இயக்குநர் எஸ்.டி.சர்மா, முதன்மை விஞ்ஞானி ஏ.ராஜசேகரன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

News in Dinamani, 21.12.2020, Coimbatore, Dr S. Kedharnath Memorial Lecture.